**STC NO**. . 888 /2023 **நாள்-** 05.08.2023 **பக்கம்**

**ம.சா.1 பாலசுப்ரமணி த/பெ. கணேசன்**

**எதிரி ஆஜர்.**

**சத்திய பிரமாணம் செய்யப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் எந்த ஆண்டிலிருந்து வாதி நிறுவனத்தை நடத்தி வருகிறேன் என்றால் 2016 ம் ஆண்டில் இருந்து நடத்தி வருகிறேன். எதிரியின் நிறுவனத்தை எந்த ஆண்டுமுதல் டெக்ஸ் வியாபாரம் பரிவர்த்தனை செய்து வருகிறேன் என்றால் எனது கடை ஆரம்பித்ததிலிருந்தே. எதிரியின் நிறுவனத்திற்கு ஆண்டிற்கு எங்களது நிறுவனத்தில் இருந்து எவ்வளவு பரிவர்த்தனை செய்து வந்தோம் என்றால் ரூ. 80 லட்சம் முதல் 3 கோடி வரை. எல்லாமே வருமானவரி கணக்கிற்கு உட்பட்டுதான் நடக்கும். இந்த வழக்கு வியாபார பரிவர்த்தனைக்கு முன்பாக இருக்கும் அனைத்து வியாபார பரிவர்த்தனைகளுக்கு உண்டான நிலுவைதொகைகள் அனைத்தும் பெற்று கொண்டோம் என்றால் சரிதான்.

2) இந்த வழக்கு காசோலைகள் என்று என்னிடம் கொடுத்தார் என்றால் 08.05.2019 ம்தேதி அன்று பின்தேதியிட்டு கொடுத்திருந்தார். இந்த வழக்கு காசோலைகள் பெறப்பட்ட பின்பு எதிரியிடமிருந்து பணமாகவோ, காசோலையின் மூலமாகவோ மதிப்பளிக்கப்பட்டோ பணம் ஏதேனும் பெற்றேனா என்றால் இல்லை. வரவு செலவுகள் அனைத்தும் எனது நேரடிபார்வையில்தான் நடைபெறும் என்றால் சரிதான். இந்த பண பரிவர்த்தனை குறித்து ledger யிலும், பேலன்ஸ் ஷீட்டிலும் வந்து விடும் என்றால் சரிதான்.

3)அவ்வாறு ஒவ்வொரு ஆண்டும் லெட்ஜரில் காண்பிக்கப்படும் கணக்குகளை வருமானவரி கணக்குகளை பேலன்ஸ் ஷீட்டில் காண்பிக்கப்படும் என்றால் சரிதான். எங்கள் நிறுவனம் எதிரியின் நிறுவனத்தை தவிர வேறு யாரிடமும் வியாபார பரிவர்த்தனை செய்வது கிடையாது என்றால் சரிதான், ஆனால் ஆஜர் எதிரி ரமா டிரேடர்ஸ் ஸின் இவரும் ஒரு பங்குதாரர் , அந்த நிறுவனத்திற்கும் நாங்கள் வியாபார பரிவர்த்தனை செய்து வந்தோம். மேற்படி டிரேடர்ஸ்ஸில் யார் யார் பங்குதாரர் என்ற சங்கதி தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

4) ஒவ்வொரு மாதமும் எங்கள் நிறுவனம் ஆடிட் செய்யும் பழக்கமுண்டு. 2019 ம் ஆண்டு 5 ம் மாதத்திற்கு பிறகு எதிரி மூலமாக வரவேண்டிய நிலுவை தொகை குறித்து எனது ஆடிட்டரிடம் கூறியுள்ளேனா என்றால் கூறவில்லை.

நீதித்துறை நடுவர் எண்.2 , கரூர்

மேற்படி எதிரி தரவேண்டிய நிலுவை தொகை இதுநாள் வரை சஸ்பென்ஸ்அக்கவுண்டில் வைத்துள்ளேன். மேற்படி தொகை ஆடிட்டிங்கிற்கு போகவில்லை என்றால் சரிதான். ரமா டிரேடர்ஸ்ஸில் ஆண்டிற்கு எவ்வளவு வியாபார ரீதியாக பரிவர்த்தனை செய்து வந்தோம் என்றால் அது சிறிய நிறுவனம் என்பதால் ஆண்டிற்கு ரூ.20 லட்சம் வரை செய்து வந்தோம். ரமா டிரேடர்ஸ்ஸிலும் காசோலையில் கையெழுத்திடும் அதிகாரம் ஆஜர் எதிரி உடையதா என்றால் இல்லை, புல்லட் கோபால் என்பவர் கையெழுத்திடுவார்.

5) ரமா டிரேடர்ஸ் எந்த காலத்திலும் வியாபார ரீதியாக எவ்வித நிலுவைதொகையும் வைக்கவில்லை என்றால் சரிதான். அவ்வாறு நாங்கள் சரக்கு ரமா டிரேடர்ஸ்க்கு விநியோகம் செய்ததிலிருந்து 10 அல்லது 20 நாட்களுக்குள் காசோலையாக கொடுத்துவிடுவார்கள். எங்களது நிறுவனத்தின் பேன் நம்பர் எனக்கு தற்போது ஞாபகமில்லை. பேன் கார்டும் கைவசம் இல்லை. பேன் கார்டில் கொடுத்துள்ள முகவரியானது நடுத்தெரு, நரசிம்மபுரம், கரூர் என்று விலாசத்தில் தான் வியாபார பரிவர்த்தனை செய்து வருகிறேன் என்றால் சரிதான்.

6) வாதி நிறுவனமான எல்எஸ் நிறுவனமானது எதிரியின் நிறுவனம் மற்றும் ரமா டிரேடர்ஸ்க்கு மட்டுமே Suborder செய்வதற்கு மட்டுமே இயங்கி வருகிறதுஎன்றால் சரிதான். 2019-2020 நிதி ஆண்டில் எதிரி நிறுவனமோ அல்லது ரமா டிரேடர்ஸ்ஸோ எங்களுக்கு நிலுவை தொகை தரவேண்டியது உள்ளதா என்றால் அந்த சமயத்தில் எதிரியை பணத்தை கொடுத்தே ஆகவேண்டும்என்று கட்டாயபடுத்தி நெருக்கி கொண்டிருந்ததால் இந்த காசோலை வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையில் இருந்து கொஞ்சம் தொகை எங்களது கணக்கிற்கு வந்திருக்கலாம் . இவ்வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு காசோலைகளுக்குண்டான நிலுவைதொகையில் 2019-2020 ம் ஆண்டில் 2 முதல் 3 லட்சம் வரை கொடுத்த சங்கதியை எனது வழக்கறிஞரிடம் நான் தெரிவித்தேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை.

7) எங்கள் ஆடிட்டரிடம் எதிரியின் நிறுவனத்திடமிருந்து இவ்வழக்கின் 2 காசோலைக்குரிய தொகைகள் வசூல் ஆகவில்லை என்றும், எனவே அதை கணக்கில் காண்பிக்கலாமா , வேண்டாமா என்பது குறித்து எனது ஆடிட்டரிடம் நான் கேட்டேனா என்றால் இல்லை. மாத மாதம் செய்யும் ஆடிட்டிங்கில் இந்த கணக்குகளை கொண்டுசெல்லவேண்டும் என்று ஆடிட்டர்கள் கூறினார்களா என்றால் இல்லை. 2019 -2020, 2020-2021, 2021-2022 ஆகிய Assesment

year களில் ஏதோ ஒரு வகையில் நிலுவை தொகை வரவேண்டி உள்ளது என்பது குறித்து மேற்படி 3 Assesment year களிலும் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு ஞாபகமில்லை. எங்களது கணக்குகளை ஆடிட்டர் பெயர் பரமசிவம் பார்த்து கொண்டிருந்தார். தற்போது செந்தில்குமார் என்பவர் பார்த்து வருகிறார்.

8) நான் எங்கள் நிறுவனத்திற்காக 2019 ம் ஆண்டு 5 வது மாதத்திலேயே ஜிஎஸ்டி செலுத்திவிட்டேன் என்றால் சரிதான். பின்னிட்டு Amendment செய்து ஜிஎஸ்டி செலுத்தினேனா என்றால் இல்லை. எதிரியின் நிறுவனமானது உண்மையில் யாருக்கு சொந்தமானது என்றால் செங்கோட்டையனுக்குதான் சொந்தமானது ஆகும். வியாபார பரிவர்த்தனை செய்யும்போது ரேணுகா என்பவர் பணியில் இருந்தாரா என்றால்இருந்தார். அவர் என்னவாக பணியாற்றி வந்தார் என்றால் பெண்களிடம் பேசும் பழக்கம் என்னிடமில்லை. அதனால் அவர் என்ன பணி செய்து வந்தார்என்று எனக்கு தெரியாது. மேற்படி ரேணுகா தற்போது என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் டெக்ஸ்நிறுவனம் நடத்தி வருகிறார். அவருடன் நான் தற்போதும் வியாபார பரிவர்த்தனை செய்து வருகிறேன்.

9) ரேணுகாவிடம் ஆண்டிற்கு எவ்வளவு வியாபார பரிவர்த்தனை செய்து வருகிறோம் என்றால் எதிரியின் நிறுவனத்திடம் எவ்வாறு செய்துவந்தோமோ அதேபோல்தான் ரேணுகா நிறுவனத்திடம் செய்து வருகிறேன். ரேணுகா நடத்தி வரும் நிறுவனத்தின் பெயர் என்ன என்றால் Superior Home Fashion INC. எதிரியின் நிறுவனத்தின் பெயர் Superior Home Fashion என்றும், அந்த பெயரோடு INC சேர்த்து ரேணுகா என்பவர் நடத்தி வருகிறார்என்றால் சரிதான். மேற்படி INC நிறுவனத்திற்கு ரேணுகா தான் Properitor ஆவார். 2019 ஆம் ஆண்டில் மேற்படி ரேணுகா என்பவர் எதிரியின் நிறுவனத்தில் இருந்து காசோலைகள், ஜிஎஸ்டி பின் நம்பர் ஆகியவைகளை திருடிகொண்டு சென்றுவிட்டார் என்று கரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்து அந்த புகாரானது கரூர் மாவட்ட குற்றபிரிவிற்கு விசாரணைக்காக அனுப்பப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

10) நான் குடியிருக்கும் வீடும், INC நிறுவனத்தின் ரேணுகா குடியிருக்கும் வீடும் 100 அடியில் அருகருகே அமைந்துள்ளது என்றால் சரிதான். எனது வீடு கட்டியுள்ள இடத்தை யாரிடமிருந்து கிரையம் பெற்றேன் என்றால் ஒரு ஜெம் எக்ஸ்போர்ட் என்ற நிறுவனத்திடமிருந்து வாங்கினேன். 2019 ம் ஆண்டிற்கு பின்னிட்டு ரேணுகாவிடமோ , ஆஜர் எதிரியிடமோ என்ன பிரச்சனை என்று நான் கேட்கவில்லை என்றால் சரிதான். எனக்கு மாரியாயி டெக்ஸ் ஓனர் ஸ்ரீனிவாசன்

என்பவர் பழக்கமா என்றால் இல்லை. ஸ்ரீனிவாசன் FTC (JM ) நீதிமன்றத்தில் குறுக்கு விசாரணை செய்யப்படும்போது நான் அவருடன் வந்தேனா என்றால் இல்லை, வேறு ஒரு வழக்கிற்காக வந்தேன், பின்னிட்டு நண்பருடன் வந்ததாக கூறுகிறார்.

11) அந்த நண்பரின் பெயர் என்ன என்றால் கண்ணன். அவருக்கு வழக்கு உள்ளதா என்றால் எனக்கு அது தெரியாது. அவருக்கு வண்டி இல்லை என்று சொன்னதால் நான் அழைத்து வந்தேன். எதிரியின் மீதும், எதிரியின் மனைவி மற்றும் மகன் மீது மாவட்ட குற்றபிரிவில் வழக்கு போட்டதுகுறித்து தெரியுமா என்றால் தெரியும். மேற்படி வழக்கில் ஸ்ரீனிவாசன் என்பவர் ஒரு சாட்சி என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ரூ.82 லட்சம் பணபரிவர்த்தனை வராததது குறித்து நான் என்ன பிரச்சனை என்று கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

( எதிரியின் தரப்பு வழக்கறிஞர் ஆவணங்கள் வேண்டும் என்பதற்காக குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர் எண்.2
கரூர்